பிஸ்மில்லா ஹிர்ரஹிமான் நிர்ரஹிம்.

சென்னை இந்து விநோத சபா டி. நாராயணசாமி பிள்ளை
கம்பெனியார், கே. சீனிவாசப்பிள்ளை கம்பெனியிலும்,
வி. கன்னையா கம்பெனியிலும், ஆலந்தூர் ஒரிஜினல்
டிராமாடிக் கம்பெனியிலும் இன்னும் மற்ற
கம்பெனிகளிலும் ஆடி பாடி
நடித்துவரும்

# அலாவுதீன் என்னும் அற்புததீபச் சரித்திரம்

(டிராமா.)

இதை

ஷை நாராயணசாமி பிள்ளை கம்பெனியின்
பிரதான ஆக்டர்களில் ஒருவராகிய,

P. R. முத்துகிருஷ்ணநாயுடு அவர்களால்
எழுதி தரப்பட்டு.

T. CHENGALVARAYA NAIDU

சென்னை,
முராஹரி அச்சுக்கூடத்திற்
அச்சிட்டு பிரசுரம் செய்தது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை) 1927 (அணா—3

உ

ஸ்ரீராம ஜெயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் யாவருக்கும் தெரிவிப்பது யாதெனில்,— அலாவுதீன் என்னும் அற்புத தீப சரித்திரம் டிராமா புத்தகத்தை ஷ நாராயணசாமிபிள்ளை கம்பெனியின் பிரதான ஆக்டர்களில் ஒருவராகிய P.R. முத்துகிருஷ்ண நாயுடு அவர்களால் எழுதிதரப்பட்டு அச்சிலிட்டு வெளியிட்டனம் ஆகையால் இந்த கீழ்காணும் என் அனுமதி வேறு யாராவது அச்சிலிடவும், வேறு விதமாய் மாத்தியின்றி யாவது அச்சிடலாகாதிருக்கும்படி கனம் கவர்ன்மெண்டாரால் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது அப்படி அத்துமீறி அச்சிடுவோரிடம் நஷ்டத்தை சட்டப்படி வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு,

டி. செங்கள்வராய நாயுடு,

முராஹரி அச்சுக்கூடம்,

சென்னை.

85918

பிஸ்மில்லா ஹிர்ரஹிமான் நிர்ரஹிம்.

786

# அலாவுதீன்

அல்லது

# அற்புததீபச் சரித்திரம்.

(டிராமா.)

மந்திரவாதியின் தனி இடம்
ஓர் இருண்ட அரை.

**1-வது சீன்** **காலம்—காலை.**

மந்திரவாதியின் ஆத்மகதம்.

பெருமைவாய்ந்த தீபத்தை அடையும்பொருட்டு பலதேவதைகளை பூஜித்து, அதனுல் யாவருலும் அடைதற்கரிதாகிய உன்னித ஜோதியை பெருவதர்க்கு, கடவுளை துதிக்கின்றனன்.

மந்திரவாதியின் துதி.

இந்துஸ்த்தான் ராகம்

கைஸாஹந்தேரே பஸேரு சனனனபோலே
பசந்தா குருகா ஹாஜமனக்கி காஜமனக்கி
ஹோ பூரு ஜமி

பூதுங்கடோரா பஸேரா சனனனபோலே
பஸந்தா குருகா ஹாஜமனக்கி காஜமனக்கி
ஹோ பூரு ஜமி

துனியாபர்மே கர்கர்யாவோ கிஸ்கிஸ் துப்பிஸசார்
கர்வாலயத்னி மொப்பிலி சர்வாரே கொய்கிசார்
ஆரே கைஸா ஹைஹோ பைஸா
கைஸா ஜோகி பை ஸா னகி
ஹாவ் ஹாவ் ஹாவ்

## மந்திரவாதியின் தரு.

தாளம்—சாப்பு, ராகம்—இந்துஸ்தான் காபி.

பெருமைவாய்ந்த தீபத்தை பெருவதெப்படி
அருமையான ஜோதியை அடைவேனோ நானே பெ

சாவித்ரிஎன்னும் தேவியே ஜடுதியில்வாராய்
தாவின்ரீஎன்னும் போகியே தந்திரம் கூராய் பெ

வசனம்.

ஹே! என் அன்பார்ந்ததேவியே; உம்மையே சதா நம்பி நான் பூஜித்தது வுண்மையாயின் இவ்வேளை என்முறைக்கிணங்கி என்முன் தோன்றி நான்கோரியபொருளை அடைவதற்கு கிருபை பாலிக்கவேண்டும். இதோ என்னுடைய ஐம்புலன்களை அடக்கி வந்தனத்தை சமர்ப்பித்தேன், இனி தாமதிக்காதீர். துரிதமாகவருவீர். இன்பம் தருவீர், நீர் ஆனந்தம்பெருவீர்.

பொது வசனம்

மந்திரவாதியின் வேண்டுகோளுக்கிணங்கி ஆகாயத்தில்இருந்து சாவித்ரீதேவிஇரங்கி மந்திரவாதியின் முன்தோன்றி.

## சாவித்ரிதேவி-தரு.

ஞானசவுந்தரியில், தர்மராஜாவுக்கும், லேனவுக்கும் தர்க்கம்.

எந்தனை விட்டுநீ (என்ற வர்னமெட்டு.)

அஞ்சாதே! அஞ்சாதே! மந்திரவாதி
அன்போ டழைத்திட்ட பதுவென்னசேதி
நெஞ்சார வாழ்த்தியே வுன்சொல்லைக்கேட்டேன்
நேசமுடன் வந்தேன் கைவிடமாட்டேன் அ

மந்திரவாதி தரு-தர்க்கம்.

எண்ணிய எண்ணத்தை யீடேறசெய்வாய்
புண்ணிய முண்டாகும் பூரிக்கச்செய்வாய்
மண்ணினில் யாவரும் எந்தனைப்போலே
மன்னவன் இல்லைஎன்றே மதிப்பாரே எ

### தேவியின் வசனம்.

மந்திரவாதி! வுன்பக்த்திக்கு மிகவுமகிழ்ந்தேன், யாதுகருதி என்னை ஸ்மரித்தாய், ஏதுவாயின் வுரைத்திடில் என்னாலான சகாயத்தை வுனக்கு செய்கிறேன், வுனதபீஷ்டமெது.

### மந்திரவாதி வசனம்.

தாயே! என் மௌடீகபக்த்திக்கு மகிழ்ந்து என்முன் தோன்றி என் அபீஷ்டத்தைஅரிய விரும்பியதால் இதோ எனது கருத்தை வுரைக்கிறேன், வேறொன்றுமில்லை. நான் வெகுநாளாக எனக்கு விருப்பம் ஒன்று உண்டு. அதாவது சீனதேசத்தைச்சேர்ந்த காட்டில் பெரியபர்வதமிருப்பதாகவும் அதில் ஒரு சுரங்கத்தில் கோடி சூரியபிரகாசம்போன்ற தீபமொன்றிருப்பதாகவும் அந்ததீபத்தை அடைந்தால்தான் நினைத்ததை எல்லாம் அடையலாம் என்கிறவதந்தி, ஆகையால் அத்தீபத்தை அடைய அருள்புரிய வேண்டும்.

### தேவியின் தரு.

ஒருத்திக்கொரு மகனைக் கொண்டுவந்தால்
வுன்எண்ணம் கைகூடும் ஓதினேனப்பா
பூதங்கள் பாதத்தைப் போற்றிப்பணிந்தால்
புண்யனே உன் எண்ணம் பூர்த்தியேயாகும் அ

### வசனம்.

அன்பார்ந்த பக்தசிரோன்மணி! நீ அத்தீபத்தை அடைவதாயிருந்தால் ஒருதாய்க்கு ஒரேமகனை இருக்கவேண்டும், அவனுக்கு தந்தையில்லாமல் இறந்திருக்கவேண்டும் அவனுக்கு வயது ஐந்தாக இருக்கவேண்டும், மகமதிய குலத்தில் பிரந்தவனாக இருக்க வேண்டும், அப்படிப்பட்ட சிருவனைக்கொண்டு அந்த தீபத்தை அடையவேண்டும். உன்னால் அத்தீபத்தை தீண்டமுடியாது. ஆகையால் என்னால் அடையக்கூடிய பொருள் ஒன்று. இதோ ஓர் கணையாழியைத் தருகிறேன் இதின் மகத்துவம் என்னவென்றால் கணையாழியை பூமியில் தேய்ந்தால் அதிலிருந்து ஓர் பூதம் உண்டாகும், அப்பூதத்தை கொண்டு நீ பெரவேண்டியதை அடையலாம். இதுவே என் கருத்து. இதோ என் மங்களவசனத்தால் ஆசீர்வதித்தேன்.

குறிப்பு:— தேவதை அந்தர மார்க்கமாய் மறைய மந்திரவாதி தேவ குருவைஸ்மரித்தல்.

## மந்திரவாதியின் தரு.

போகுதுபார் ஒருமான் (என்ற வர்னமெட்டு.)

### பல்லவி.

வருவாய் தேவ குரு நாதனே
வாராய் செங்கமல பாதனே வரு

### அநுபல்லவி.

தருவாய் ஒருமாத் திரைக்கோல்
திருவிளக்கை யானடைய வரு

### சரணம்.

அற்புத தீபமொன் றிருப்பதாக
அடியேன் கேள்வி யுற்றதாலே
பொற்பெரும் நலம் பெறவே
புகழ்பெரும் முனிவரேரே வரு

### வசனம்.

சுவாமி! இதோ என் மனப்பூர்வமான வந்தனத்தை செலுத்தினேன்; என்பக்திக் கிரங்கி அருள்செய்யவேண்டும்.

குறிப்பு:—பூமியிலிருந்து குருநாதர் பிரார்த்தமாகினர்.

### மந்திரவாதியின் வசனம்.

சுவாமி! குருநாதா, நான் தீபத்தை பெருவதற்காக தேவதாரயை ஸ்மரித்தேன், அவள் என்மீது கருணை கூர்ந்து அடையும்மார்கத்தையும் கணையாழியையும் தந்து மறைந்தனள்.

### தேவகுரு வசனம்.

ஹே, மந்திரவாதி! தீபத்தை அடையவிரும்பினல் நீகோரிய சிருவன் சீன தேசத்திலிருக்கிறன், அவன் இப்போது மிகவும் எழைகுடும்பமாக இருக்கிறன், இதுசமயம் நீதகுந்த மனிதனேடு அங்குசென்று அவனைக் கண்டு முறைகொண்டாடி தந்திரமாய் காட்டின் மார்க்கமாய் அழைத்துச் சென்று அச்சிருவனை பிலத்துவாரத்தின் வழியில் இறக்கி அவன்கையினல் அத்தீபத்தை எடுக்கச்செய்து அவனிடத்திலிருந்து தீபத்தை நீபெற்றுக்கொண்டு அச்சிறுவனை அக்குகையிலேயே அவனை

இறையாக்கிவிட்டு வரவும். இதுவே நீ அடையும் மார்க்கம். அங்குள்ள பூதங்களால் யாதா மொரு விபத்துகள் நேருமலிருக்க இதோ மாத் திரைக்கோல் தந்தேன், பெற்றுக்கொள். நான் சென்று வருகிறேன்.

குறிப்பு:—மந்திரவாதி தன்தோழனுகிய ஊமையை யழைத்து கொண்டு சீனுதேசம் புரப்படுகிருன்.

குறிப்பு:—சீனு தேசத்தில் ஓர் ரோட்டு, அங்கு அனேக சினேகி தர் களுடன் அலாவுதீன் என்னும் தந்தையை யிழந்த சிருவன் விளை யாடிக் கொண்டிருத்தல்.

அலாவுதீன் வசனம்.

அடே! அப்துல்கரீம், எல்லோரும் ஒன்றுசேர்ந்து கோலியாட லாமா.

ஷம்சு வசனம்.

அரே அலாவுதீன்! தும்ஹாரே, ஹாவ் க்யா கேல், போலோஜி.

## எல்லோரும் சேர்ந்து விளையாடும் பாட்டு.

கண்ணி

தரு இராகம்-கமாஸ் அடதாளம்.

எல்லாம் விளையாடுவோம் ஆடுவோம் பாடுவோம்
ஆடுவோம் பாடுவோம் கூடுவோம் நாடுவோம் எ

பாலகிருஷ்ணு கண்ணு குப்பண்ணு சுப்பண்ணு எ

## அலாவுதீன் தரு, தர்க்கம்.

பந்தாடிடலாம் (என்ற வர்னமெட்டு.)

ஆடுவோம்வாரீர் ஆவலுடன் நாம்
அனைவரும் கூடி ஆடு
தம்பிநீவாடா ஒரு தம்பிடிதாடா
கும்பலில் போடா கொப்பெனவே இன்று ஆ

சம்ஸு தரு.

அடிக்கொரு தம்பிடி குழிக்கொரு பைசா
ஆடுவோம் நேசா ஆனந்தமுடனே ஆ

அலாவு தீன்

அணேவருமகிழ ஆண்டவனருளால்
ஆயிட்டேன் கேம்புமே அன்பர்களே
ஆச்சுதெனக்கு கேம்புமே போச்சுதுங்கள் பந்தயமே ஆ

வசனம்.

அரே, ஷம்ஸு! என்னுடைய ஆட்டம் தான் கெலித்தது, நான் அடித்துவிட்டேன், கேம்பு ஆய்விட்டேன், பந்தயம் இனி என்னைச் சார்ந்தது.

குறிப்பு:—அலாவுதீன் முதலானவர்கள் விளையாடிக்கொண்டிருப்பதை மந்திரவாதியும் வூமையும் கவனித்துக்கொண்டிருக்க அலாவுதீன் தாயார் வருகிறுள்,

தாயார் பீபீ தரு—தர்க்கம்.

எட்டு நாளேயில் பாரும் (என்ற வர்னமெட்டு.)

சின்னம் சிறுபயலோடாநீ எப்படிப் பிழைக்கப் போருயோ சி

அலாவுதீன்.

அம்மணி என்னே வருத்தாதே
என்னே அடித்தாலும் வேலே தெரியாதே சி

பீ பீ தரு.

தந்தையிரந்துத் தனியாளுய் நீ
தையல்வேலே செய்யாது போனுய் த

அலாவுதீன் தரு.

காலேயில் பழையதுபோடு தின்று
கடிகிவிளேயாட சிருவரோடு சி

பீ பீ தரு.

போக்கிரிபயலே நீபோடா நல்ல புத்தியென்ப தில்லேயடா

அலாவுதீன் தரு.

வேலேயும் செய்ய மாட்டேன் தாயே
என்னே வீணுய் வருத்தாதே நீயே சி

பீபீ வசனம்.

அரே! அலாவுதீன்! நீ இன்னம் சிறுபிள்ளேயைப் போல் விளேயாடிக்கொண்டிருந்தால் நாம் எப்படி ஜீவனம்செய்கிறது, உன் தந்தையார் இறந்தபொழுது எந்தவிதமானபொருளேயும் வைத்துவிட்டுபோகவில்லே, இதுவரையிலும் நான் கூலிவேலே செய்து உன்னேக் காப்பாற்றினேன், எனக்கோ வயது தளர்ந்துவிட்டது, இனியாகிலும் உன் தந்தை செய்துவந்த தையல் தொழிலே நீசெய்து நாலுபணம் சம்பாரித்தால் நாம் ஜீவனம்செய்யலாம். இனி விளேயாட்டு கூடாது, உன் தந்தைபெயரை கெடுக்காதே, நமக்கு வேறுதுணே கிடையாது, உனக்கு சிரியதந்தை ஒருவர் இருந்தாரும்; அவரும் உன் தந்தையிடம் சண்டையிட்டுக் கொண்டு தேசாந்திரியாய் போய்விட்டாரும், அவரை நான் கண்டதில்லே, அவர் எந்த வூரில் இருக்கிருரோ; உன் தந்தை இறந்தது அவருக்கு தெரியவில்லே போலும், தெரிந்திருந்தாலும் இங்குவந்து நம்மையும் ஆதரிப்பார். என்ன செய்யலாம், ஹல்லா ஹூதாவினுடைய அருளிருந்தால் எல்லா நன்மையும் உண்டாகும்.

அலாவுதீன் வசனம்.

அம்மா! நான் வேலேக்குப் போகிறேன்; ஆனல்வீட்டுக்கு வருகிறேன், எனக்கு கொஞ்சம் பழயது போடு, தின்றுவிட்டு வேலேசெய்து சம்பாதித்து வருகிறேன்.

குறிப்பு:—மந்திரவாதி அலாவுதீனேக்கண்டு சிற்றப்பனென முறை கொண்டாடுகிருன்.

மந்திரவாதி வசனம்.

அடே! அலாவுதீன், உனது பாபா சவுக்கியமாய் இருக்கிருரா? அவர் எங்கே இருக்கிருர், சீக்கிரம் அவரைக் காண்பிப்பாய், அவரை நான் பார்க்கவேண்டும்.

அலாவுதீன் வசனம்.

அய்யா! உம்மைப் பார்த்தால் எனக்கு பயங்கரமாய் இருக்கிறது, நீர் யார்! உம்முடைய பெயரென்ன! அவரை விசாரிப்பதற்கு காரணம் யாது.

மந்திரவாதி வசனம்.

அடே! அலாவுதீன், என்பெயர் முஸ்தபா; எனது தமையனுர் தான் உனது பிதா, நானும் உனது பிதாவும் சில வருஷங்களுக்கு முன்

குடும்பவிஷயத்தில் சச்சரவு செய்துக்கொண்டு நான் தேசாந்திரியாய் போய்விட்டேன், இப்போது நான் இருந்த ஆபிரிக்கா தேசத்தில் என் தமையனுக்கு பிள்ளை பிரந்திருக்கிறுனென்றும், ஆனால் மிகவும்ஏழ்மை திசையில் இருக்கிறுர்கள் என்றும்கேழ்விப்பட்டேன், ஆகையால் அவரைப் பார்க்கவேண்டுமென்று அதிக ஆசையாயிருக்கிறது, எங்கே அவர் சீக்கிரம் சொல்,

அலாவுதீன் வசனம்.

அய்யா! எனது பிதாவாகிய உனது தமையனுர் மவுத்தாய்விட்டார். அதுமுதல் நாங்கள் மிகவும் கஷ்டப்படுகிறோம்.

குறிப்பு:—மந்திரவாதி உண்மையான தமையன் இறந்துவிட்டதைப்போல் அங்குள்ள சிறுவர்கள் நம்பும்படி மேலுக்கு தேம்பி தேம்பி அழுகிறுன்.

ஊமையன்

மந்திரவாதி காணும்படி அழுகிறுன். அலாவுதீனைக் கண்டு சிற்றப்பனல்லவென குறிப்பு காண்பிக்கின்றுன். அலாவுதீன் அரியவில்லை.

மந்திரவாதி—தரு

அய்யாவுயிர்விட்டீரோ என்ற வர்ன்மெட்டு.

அண்ணு உயிர்விட்டீரோ அரும்பாலனைவிட்டு அ
எண்ணுமலேநான் ஏனோபிரிந்தேன்
கண்ணுலெனை பார்க்காமலே அ
இப்படிவருமென்று எண்ணுமல்போனேனே
எப்படி உனை மரப்பேன் அ
பாவியாம் எந்தனை பார்க்காமலெய்யமோ
ஆவிபிரிய லானீரே அ
எந்தகாலத்திலுனை இந்த கண்ணினுல் காண்பேன்
பந்தமும் பிரிந்திட்டதோ அ

வசனம்.

ஹோ! அண்ணு! உம்மை அதிக ஆவலோடு காணலாமென வந்தவிடத்தில் நீர் மவுத்தாய்விட்டதாக கேழ்விப்பட்டும், ஐயோ என்பிராணன் போகாமலிருக்கிறதே; ஐயோ! இனி எப்படி உம்மைமறப்பேன், நாம் ஒருதாய் வயற்றில்பிறந்து ஒருவனையாய் வளர்ந்து சந்தோஷமாய் இருந்த காலத்தில் உம்முடன் வீணுக சண்டையோட்டுக்கொண்டு பிரிந்

தேன், இந்த துபரமான சேதி அரியவா இங்குவந்தேன், ஹா! கடவுளே? அடே! அலாவுதீன், உன்னைப் பார்த்தால்எனக்குமிகவும் வருத்தமாய் இருக்கிறது, உன்தந்தை யிருப்பென்ன; அவர்யோக்கியதை என்ன; அவர் பெருமைஎன்ன; அவருக்கு பிள்ளையாகப்பிறந்த உனக்கு இக்கெதி வருவதற்க்கு கடவுள்செயல். ஆண்டாண்டுதோரும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? ஹே! அலாவுதீன், சீக்கிரம் உனது தாயாரிடம் செல்வோம், வா.

குறிப்பு:—அலாவுதீனிடம் ரூபா-10 கொடுத்தனுப்புகிருன். அதைப் பெற்றுக்கொண்டு தாயிடம்போய் நடந்த விபரத்தை தெரிவிக்கிருன்

---

## 2-வது சீன் காலம்—காலை.

### அலாவுதீன் வீடு.

அலாவுதீன்-வசனம்.

அம்மாகே! எனது சிற்றப்பாவாம்; அவர் இங்கேவந்திருக்கிருர். பாவாவைக் கேட்டார், மவுத்தாய்விட்டதாக தெரிவித்தேன், உடனே மிகவும் அழுது துடித்தார், பிறகு ரூபா-10 கொடுத்தார், இதோவந்திருக்கிருர் அம்மா!

மந்திரவாதி வசனம்.

கோஷா! கோஷா! கோஷா!

மந்திரவாதி வசனம்.

அண்ணியம்மா! என்னசெய்யலாம், ஆண்டவன் செயலை யார் தடுப்பவர், வரும் விதி வந்தேதீரும், ஆயினும் தாங்கள் கவலைப்பட வேண்டாம், நான் இருக்கிறேன், உம்மையும் குழந்தையையும் காப்பாற்று கிறேன், குழந்தையை அழைத்துக்கொண்டுபோய் நல்ல ஜுப்பா, ஷெருய், டொப்பி, இவைகளை வாங்கிக்கொண்டு வருகிறேன், உத்திரவுதானு? இந்தா ரூபா-100. இதைவைத்துக்கொண்டு மிரியாணிசெய்யுங்கள் இதோவருகிறேம்.

குறிப்பு:—அலாவுதீனை அழைத்துக்கொண்டு கடைவீதி மார்க்கமாய் போய் வேண்டியதை வாங்கிகொடுத்துக்கொண்டு காட்டின் மார்க்கமாய் அழைத்துப்போகிருன்.

## சீன் காடு

(இருண்டவனம்.)

இறிப்பு:—மலை குகையின் சமீபத்தில் வந்து தீபத்தையும் காண்பித்து அதை எடுக்கும்படி தெரிவிக்கிறான்,

ஊ மை ம.

போகவேண்டாமென்று சைகைசெய்கிறான்,

தரு - தர்க்கம்.

கோமளப்பெண்மானே என்ற வர்ணமெட்டு.

மந்திரவாதி

ஏனோடாதாமதிக்கிறாய் எந்தன்பாலக

ஏதோமயங்கி

(அலாவு தீன்.)

பத்துநாளாகநடந்து மெத்தவும் கலங்கலானேன்

மந்திரவாதி

வானவர்க்குமேகிட்டா தேனையருந்திட

தானழுவதேனோ சொல்வாய் தனையாகேடா ஏ

அலாவுதீன்.

எந்தனே காணுமலே ஏங்கிதுடிப்பாளென்தாய்

சிந்தையுங் கலங்குதே என் சிற்றப்பாகேளாய் ஏ

வசனம்.

சிற்றப்பா! எந்தனை மிகவும் கஷ்டப்படுத்துகிறீர், பத்துநாளாக நடந்து வந்த தால் என் கால் கைகள் மிகவும் சோர்ந்துவிட்டது, இனி என்னை தொந்தரை செய்யாதீர்கள், என்தாய் என்னைபிரிந்ததால் மிகவும் வருந்துவாள், ஐய்யய்யோ!

மந்திரவாதி - வ-ம

அடே! உனக்கு வேண்டியதை கொடுத்தும் உனது தாயாருக்கும் வேண்டிய ரூபாயும் கொடுத்து உன்னை அழைத்துவந்து தீபத்தை எடுக்

கச் சொன்னால் உன்னால் முடியாது என்று சொல்லுகிறாய், இது கூடாது, இனி மருத்தால் கோபம் உண்டாகும்.

ஊமை.

நீ போகாதே; நீ போனால் உனக்கு கஷ்டம்உண்டாகும் உண்டாகு மென்று ஜாடையாகசொல்லுகிறான்.

அலாவுதீன் - தரு

(அனியாயமாகச் சண்டாளன் என்ற வர்ணமெட்டு.)

ஆண்டவாநான் பாவியாகினேனே
அன்னை தந்தையை இன்றுமறந்தேன் நானே
வேண்டாதே காரியம்செய்து தானே
விசனத்திலாழ செய்குறானே ஆ

கடவுள்தொழுகையை மறந்தேனே
காட்டில்நின்ற கலையவுமாகினேனே
பாவியும்எந்தனை பாரையிலே
பரிவுடன்கொல்ல துணிந்தனனே ஆ

வசனம்.

ஹே! ஆண்டவா, அனியாயமாய் என்னை இந்த காட்டில் கொண்டு வந்து இவன் கொல்லப்பார்க்கிறான், இவனைப்பார்த்தாலே எனக்கு சந்தேகமாய் இருக்கிறது, இவன் சிற்றப்ப னல்லவென்றே எண்ணுகிறேன்; ஊமையன் ஏதோ ஜாடை செய்கிறான்.

மந்திரவாதி தரு.

ஐசாகர்ணு ஒவ்வாபர்ணு என்ற வர்ணமெட்டு.

சொல்வதை கேளாமலே சோகமுறுவதேனடா
நல்லவனென்றேஎண்ணி நாடினேன் நான்பாரடா
மந்திரமோதிரமேந்தி தந்திரமாய் சென்றுள்ளே
விந்தையாம் விளங்கும்சுடர் விளக்கடைவாய்இன்னுளே

அலாவுதீன்.

அய்யாஇப்பாலனை அலையச்செய்யாதே
மெய்யும் நடுங்குதே மேனியும் வாடுதே

மந்திரவாதி.

அடிப்பேனுந்தனை கடிப்பேனுனை
அரிவாயிதனை தெரிவாய் சுதனே
ஆஹா உன்னை விடுவேனோ சொ

அலாவுதீன் இந்துஸ்த்தான்

தரு

குதாஜானேகே, கிஸ்மத்துமே
அமாரா காலியா ஹோரா கா
ஜோஜாஹர் இஸ்கேமே பிதம்
வலேபாதில்மே க்யா ஹோரா கா கு
அமாராஜோப சீலாஹை
ஒஹிஹைதோஸ்து ஹல்லாக்கா
நவாஸாயிஸ்கே ரசூலில்லாக்கா
ஹோக்கேத்தே கர்பாலர்ஹோ கு
நஹோஹாம் ஹம்மத்திவாறு
தூஹியாவோ ஹௌரகர்தாஹை
ஹப்பேகத் கோலியே தேரே
வஹாஷேரே குதர்ஹோ கு

தரு தர்க்கம்.

கஹஜாத்ததும் முஸ்குர்பாம் என்ற வர்ணமெட்டு.

மந்திரவாதி

உனையொரு பத்திரம் செய்யவில்லை செல்லடா

அலாவுதீன்

தருண தருணமிதோ சரணமடைந்தேன்

மந்திரவாதி:— மனதிலேய்யமதை வையாதே

அலாவுதீன்:— கவலைகொண்டுமிக கலங்குறேன்

மந்திரவாதி:— தனமே தருவேன்

அலாவுதீன்:— பணமே வேண்டாம்

மந்திரவாதி:— இனமேமா மீறும்

அலாவுதீன்:— இனியென் செய்வேன்
மந்திரவாதி:— துணிப்பேன் தலையை
அலாவுதீன்:— தணிப்பாய் கோபம்
மந்திரவாதி:— கணமே செல்வாய்
அலாவுதீன்;— பயமா குதே
மந்திரவாதி:— வீணேவாதா எதடாநீ உன்னை

வசனம்.

அடே! என் வார்த்தையை மீறினால் உனதுகட்டிடைப்பை கடிப்பேன், உசிரம்குடிப்பேன், சீக்கிரம் சென்று தீபத்தை எடுத்துவா? இதோ, இந்த கணையாழியை போட்டுக்கொள்;

அலாவுதீன் தரு கண்ணி

அன்னமே உந்தனே என்ற வணமெட்டு.

ஒண்டியாய் வனத்திலினி யானிங்கிருப்பேன்
கலையோகண்மூடுதே காட்டில் கார்ப்போரில்லையே
கண்டிருள்தனிலே யாரை காண்பேன் சிவமே ஒண்

வசனம்.

ஹா! கடவுளே, அனியாயமாபி தந்தையை யிழந்த இச்சிறுவனை கொல்லபார்க்கிறானே. இனி யென்செய்வேன், திக்கற்ற எனக்கு வேறு துணையில்லாமல் தவிக்கின்றேன். ஹே! அல்லாகு அக்பர், ஊமையன் நமக்கு துணையாக இருக்கிறாப்போல் தெரிகிறது, ஆயினும் அவனை தனியாக விசாரிக்கலா மென்றால் இந்தபாவி நம்மை விடாமல் பின் தொடருகிறான், ஹா! கடவுளே.

மந்திரவாதி - தரு

தர்கம்

கர்னஜர் முஸ்பர்து என்ற வர்ணமெட்டு.

ஜாலம்செய்தாலுன்னை தள்ளுவேன் நான் அடாஅடாஅடா
ஏனடா ஏனடா செய்யும் வித்தை பரிகுவேனடா

85918

அலாவுதீன்:— எந்தனை நீ தொந்தரைகள்
மந்திரவாதி:— ஏகத்தடை யென்ன
அலாவுதீன்:— ஆகம் நிலைக்காது
மந்திரவாதி:— போகத்தடை யென்ன
அலாவு தீன்:— காயம்நிலைக்காது (ஜாலம்)

அலாவுதீன் - தரு
இந்துஸ்தான்

ஹைறுதாக்கே ஜாத்தஹைறவோ
ஜாத்தஹ்கமத் ஹைறவகி
மீம்க்ரபுர்காலியா நூரேமகமத்ஹைறவகி ஹைற

மன்ஹறரப்பாஸா நப்ஸஹறு
பகத் ஹறரப்பாஸ் ரப்ஸ்ஹறு
எக்கதிஸம் ஜாயஜிஸனே
பாகத்முறஹத் ஹைறவஹி ஹைற

ரபதூரபிபறபி தேக்ஜாஹோலனபி
பைஸ்முறஹத்ஸே தூயியிமான் தீரமேபாயாஜஹறு ஹைற

மந்திரவாதி - தரு.
என்னடி என்னடி என்ற வர்ணமெட்டு.

செல்லடா செல்லடா
சீக்கிரமாகயிக் குகையினுள்ளே செ

நல்லவனென் றன்னைநானும்
நாடினேனென் றறியடா செ

குறிப்பு:—அலாவுதீன் குகையில் போகாததால் கோபத்தால் உள்ளே தள்ளுகிறான், ஊமையையும் உள்ளே தள்ளி குகையின் வழியை பெரிய பாரையால்மூடிவிட்டு போகிறான்.

குறிப்பு:— (இங்கு சீன்காக்ஷி!) மலைவெடித்து பொன்னுலகம்போல் கான அலாவுதீன் தீபத்தைபெற அனேகபூதங்கள் அவனை பயமுறுத்த ஊமையின் உதவியால்தீபத்தை அடைகிறான்,வெளியேவரும் மார்க்கம்

தெரியாமல், தவிக்க ஷமையின் ஜாடைமொழியால் மோதிரத்தைதேய்க்கிறான். கணையாழியைதேய்க்க அதற்கு அடிமையாகிய பெரும் பூதம்வெளிப்பட அலாவுதீன் அதனைக்கண்டு பயப்பட்டு கடவுளை துதிக்கிறான்.

## அலாவுதீன்-இந்துஸ்தான்.

பிகிடிமேரிபனுதோ பந்தானுவாஜுகாஜா
அல்லாஅசேமிலாதோ பந்தானுவாஜுகாஜா

ஷர்ஹைஅமீரகர்தே ஷாஹைபகீரகர்தே
ஜிஸெஸாஹைத்துபனுத்தோ பந்தானுவாஜு காஜா பிகி

ஹாயாகுந்தர்பத்தேரே ஜோகுஷ்முருதாதேதே
கிப்ஸேபடாவும்தர்பர் பந்தானுவாஜுகாஜா
அஜிமேரு பந்தானுவாஜுகாஜா பிகி

முஷ்கில்மோபடி ஹைஅம்பர்
தாரஹமா கர்தயாரப்
தேரேதர்காமைகெதாவும் பந்தானுவாஜுகாஜா பிகி

### வசனம்.

ஆண்டவா! சண்டாளப் பாபியாகிய அந்த மந்திரவாதி என்னைக் கொல்ல நினைத்து இந்த சுரங்கத்தில் தள்ளி திகைத்து நிற்கும் வேளையில் இதேதோ பெரும்பூதம் ஒன்று என் எதிரில் நிற்கிறதே? நான் எப்படி பிழைப்பேன், எவ்வாருய்வேன், இது என் பூர்வஜன்மந்ததர கர்மமோ? அறியேன், ஷமையன் நமக்கு துணையாக ஏர்ப்பட்டான், இவனைக்கொண்டு தப்பித்துக்கொள்ளும் மார்கம் தேடவேண்டும்.

### ஷமை-வசனம்.

நீ பயப்படாதே? இந்த பூதம் நம்மை ஒன்றும்செய்யாது, இந்த கணையாழிக்கு அடிமையானபூதம், நாம் இடும்படியான ஏவல்களை செய்யக்கூடியது, இந்தபூதத்தைக் கொண்டு நாம் நமது தேசம் செல்லலாம்.

### அலவுதீன்-வசனம்.

ஹே! பூதமே, எங்கள் இருவரையும் சீனதேசம் கொண்டு போகிறாயா?

பூதம்-வசனம்.

உம்முடைய உத்திரவுபோல் இருவரையும் கொண்டுபோகிறேன், ஆனால் இருவரும் நேத்திரத்தை மூடிக்கொள்ளுங்கள்.

குறிப்பு:—அலாவுதீனும் ஊமையும் வேண்டியமட்டும் அனேக ரத்தினங்களை எடுத்துக்கொள்ளுகிறார்கள், பூதம் தன் மாயாசத்தியால் வீட்டில்கொண்டுபோய் சேர்க்கிறது.

---

## 3-வது சீன் காலம் —காலை.

### அலாவுதீன் ஏழைவீடு.

### தாய் பீபீ-தரு.

போனவரின்னம்—என்ற வர்ணமெட்டு.

போனவனின்னம்வரவே காணேனய்யோ
போதும்போச்சுதே என்மனமேதோ
பொங்குதென்செய்வேன் புலமதரியேன் போ
எந்தனைவிட்டொருக்ஷணம் பிரிந்தரியான்
எனதுயிர்கண்மணி இதோவாரேனென போ
பத்துநாளாகியும் பாலனைக்காணேன்
பழிஎன்னநேர்ந்ததோ பாவையுமரிகிலேன் போ

பீபீ—வசனம்

ஆமகனே! வந்தாயையா, உனது சிற்றப்பா எங்கே; ஏன் இத்தனை நாள் சென்றது, எங்கு போய் இருந்தீர்கள், முகம் வாடிஇருக்கவேண்டிய காரணமென்ன; ஏதேனும் ஆகாரம் எடுத்துக் கொண்டாயையா? திரேகம் படபடவென் றடித்துக்கொள்கிறது, என்னகாரணம், சீக்கிரம்சொல்.

### அலாவுதீன் தரு தர்க்கம்.

ஏனோஎன்மேல்பழி என்ற வர்ணமெட்டு.

தாயேபசி தாகமெடுக்குதே
தானேனேதாகிலும் தாளேனேதாகிலும்
தந்தாலதனை வுண்டுபிழைப்பேன் தா

பீபீ

தனையனோரம்மெத்த தரித்திரனானதால்
சமயத்திற் கண்ணமிங்கேது
தையல்தொழில்புரிந்து சம்பாதித்திருந்தாலும்
சமயத்திற்குதவு மிப்போது தா

அலாவுதீன் தரு.

சோரு தென்றுவியும்

பீபீ.

சுதனேவிதியிது ஆதலால் பொரு பொரு தா

வசனம்.

அடா மகனே! என் செய்வேன், கையில் காசுகிடையாது, வீட்டின் அடுப்பில் பூனை தூங்குகிறது, கடன் கொடுப்பார் யாருமில்லை, ஆயினும் சற்று பொரு, சமைத்துப் போடுகிறேன். உனது சிற்றப்பனெங்கே, நீ தனியாக வரவேண்டிய காரணமென்ன.

அலாவுதீன்-வசனம்.

அம்மா! இங்குவந்தவன் சிற்றப்பனல்ல; அவன் ஒரு மந்திரவாதி, என்னை ஏமாற்றி இருண்ட காட்டில் அழைத்துக்கொண்டுபோய் பெரிய மலை குகையில் என்னைத் தள்ளி பூதங்களின் வாய்க்கு என்னை இறையாக்க எண்ணினன், இந்தஊமையன் உதவியால் மீண்டும் பிழைத்து வந்தேன், இனி அவன் இங்கே வரமாட்டான், வந்தால் அவனைக் கட்டாயம் நான்கொல்லுகிறேன், நீ சீக்கிரம் சமயல் செய்யுங்கள்.

குறிப்பு:—தாயார் அலாவுதீன் கொண்டுவந்த தீபத்தை நன்றாய் துலக்கி விற்றுவிட்டு போஜனத்திற்கு வேண்டிய சமான்கள் வாங்க எத்தனிக்க தீபம் பூமியில் பட்டவுடன் பூதம்வெளிப்படல், பூதத்தைக் கண்ட தாயார் திகிலடைந்து பூமியில் மூர்சசித்து விழ்தல், அலாவுதீன் ஊமை இருவரும் வருதல், விபரம்தெரிந்துக்கொள்ளுதல், பூதத்தினால் சகல சம்பத்தும் அடைகிறார்கள்.

அலாவுதீன்-வசனம்.

ஹோ பூதமே! எங்களுக்கு நல்ல ஆபரணமும் ஆடையும் கொண்டுவா நாங்கள் பட்டணம் சுற்றிவரவேண்டும்.

(பூதம் உடனே கொண்டுவருதல்.)

## சீனு தேசம்.

குறிப்பு:—சீனுராஜன் மகள் பத்ரூல் அனேக சேடிகளுடன் நித்திரைசெய்கிருள், சொற்பனத்தில் கண்ட புருடனை சேடிகளை விசாரித்தல்.

---

4-வது சீன் காலம்—காலை

### படுக்கை அறை.

எந்திழை என்ற வர்ணமெட்டு.

### பத்ரூல் - தரு தர்க்கம்.

ஆ சகிகாள் அடியாளுடன் அமர்ந்து நித்திரைசெய்ததுரை எங்கு சென்று ரறிகிலேன் ஆ?

சகி - தரு

மாதேதோரீ மர்மம் வைத்து ஓதியது
ஒவ்வாது ஒவ்வாது இதுயேதோ பெருஞ்சூது மா

பத்ரூல்.

வஞ்சியேகொஞ்சியே பஞ்சவனெங்கடி
வாடிஎன்மர்மம் பொல்லாதடி
அஞ்சாமல் முன்னேடி அழையாவிடில்தேடி
அடிப்பேனுன்பாரடி ஆவியில்லாதடி ஆ

சகி.

ய்மையரியாதெவ ரிங்குவந்தார்
நம்புவாய் நாரி யுண்மைதேர்
விந்தையாய்எம்மோடு வீண்வாதுசெய்வது
தன்னைமறந்து தவிப்பதுமாகாது மா

பத்ரூல்.

சந்திரவதன ரூபனேவாடா
எவர்சாபமோவெருத்த தென்னடா
தந்திரமேதொன்று மரிகிலேன்மாரா
தாதிகாள் நீரேடி தேடியழையுங்கள்

பத்ரூல் வசனம்.

சகிகாள்! என்னருமைக் காதலன் இன்றிரவு என்னுடன் அன்போடு கூடி மகிழ்ந்து இன்பவிளையாடிய காதலனை எங்கே ஒளித்து

வைத்துவிட்டீர்கள், சீக்கிரம் என்னெதிரில் கொண்டுவந்து சேர்ப்பீர்கள், இல்லையானால் உங்களுக்கு தகுந்த தண்டனை விதிப்பேன், என்னிடம் பரிகாசம் செய்யாதீர்.

தோழி–வசனம்.

அம்மா! உங்களிடம் நாங்கள் பரிகாசம் செய்யவில்லை, தங்களுக்கோ இன்னம் விவாகம் நடக்கவில்லை, கன்னிபருவம் அடைந்து அந்தப்புரத்தில் இருக்கும் உம்மிடம் எந்தகணவன் வந்தார், இதெல்லாம் சொர்ப்பன பலன், உண்மையல்ல, ஏன் வீணாக எம்மை வருத்துகிறீர், நிதானியும்.

பத் - வசனம்.

சகிகாள்! நீங்கள் எவ்வளவு சொல்லியும் நம்பமாட்டேன், உண்மையாக என்னிடம் சொல்லுங்கள்.

இந்தமன்னன் என்ற வர்ணமெட்டு.

பத்ரேல் - தரு

ஆரோ அறைகுவாய் தோழிஅவர் ஆ
பேரோபூமான்பிறந்த தெவ்வூரோஅவர் ஆ

நேற்றிரவென்கினவில் நிகரிலாரூபத்துடன்
பூர்த்தியாகநடித்து பூவையையேமாற்றியபூமான்
வெகுபுகழொணு புண்ணியம் செய்தபுனிதன்அவர் ஆ

இந்துவைபழிக்கும் இளம்பர்வவதனமும்
மந்தமாருதம்வீசும் மதனன்தன்வில் புருவமமைந்த
கந்தன்வேலை பழித்தநுதம் விழியோன் அவர்சகி ஆ

நாசிசுகந்தம்வீசும் கூசாகோவைவிதழும்
ஊசியரும்பையொற்ற உகந்தபல்வரிசை யுமமைந்த
இக்காசினியில் ஜனித்த கண்ணன்வடி வழகன்அவர் ஆ

வசனம்.

சகி! அவர் தேக காந்தியும், சிங்கார நடையும், குளிர்ந்த பார்வையும், இனிமையான வாக்சாதுர்யங்களும். உன்னத ஆடையும், பார்க்கப்பார்க்க மனதை பரவசப்படுத்திய இன்பங் கண்களைக் காண என்மனம் நாடுகிறது, இனி என்னை புண்படுத்தாதீர்.

மன்னனை துவாரு என்ற வர்ணமெட்டு.

தரு.

ஏதுவாது செய்வது ஏர்க்குமே உமக்கினி
எவருரைத் . . தாரித்தீது ஏது
சூதே தோஷினெந்தநீ சுடுகிறாய் எந்தனை ஏ
அந்த தீரனென்னை அணைந்து முத்தாடி
சிந்தைகலி தீர்த்த துரைஎன்மீது. ஏ
காதலோடுகூடி கனவில் முத்தாடி
கலவிதந்தோன் காதலனைக்காண ஏ

வசனம்.

சகிகாள்! இனி என்னிடம் பொய்பேசவேண்டாம். இரவு என்னுடன் சந்தோஷமாய் கூடி யாடி மகிழ்ந்து இருக்கும்போது, அவர் இவ்வூரிலேயே இருக்கிறதாகவும், அவர் பெயர் அலாவுதீன் எனவும், அவர் தையல்வேலை செய்கிறதாகவும், தந்தையில்லாதவர் எனவும், இவை எல்லாம் ஆதியோடந்தமாய் என்னிடம் கூறினர். உங்களுக்கு அவரை தெரியுமா!

சகிகாள் - தர்க்கம்.

ஆவலாய்அவன்மீதினில் அலைகுவதேர்க்குமோ நீகூறாய்
கேவலம் இழிகுலத்தோனை நி-கூடவேமனமுற்றதால்
அவனம்பிதபோதேனங்களும் அறிந்ததால் அறைந்தேனம்மா ஆ

பத்ரேல்.

அரிவைஎனக்கவர் தந்தசுகமதை அறையஎன்னலாகுமோ
சரியானமதனலீலைகள் சலிக்கவேதந்தாரடி ஆ

சகி.

இனவோரினை வென்றுணர்ந்திடமலே கலங்கிவாடவுமாகுமோ
மனபித்தென்றுணருவாய் மங்கையேநீ-மயங்காமலே ஆ

வசனம்.

அம்மா! அவரோ தையல்வேலை செய்யப்பட்டவர், அவருக்கு வேருவேலைகள் தெரியாது, மேலும் பரமஏழை, நித்தியதரித்திரர், அவர்மீது தாங்கள் ஆசைகொள்வது எங்களுக்கு மிகவும் கேவலமாய் இருக்கிறது. அவ்வெண்ணத்தை விட்டொழியும், யாரேனும்கேட்டாலும் மானக்கேடு.

எப்படி மன்னவனே என்ற வர்ணமெட்டு.

பத்ரூேல் - தரு.

காதகிபே எந்தனை நீ கடிந்துரைக்க போமோ—அந்த
நீதுசெய்யும் மாரன்பால் நீட்ருென் பாராயோ கா
எதுநீ உரைத்திடினும் ஏர்க்காதென் செவிக்கே
சாதுவா னரசனைப்போல் தரணியில் நான்காணேன் கா

வசனம்.

சகிகாள்! என்னுதனை காணுத கண்கள் புண்களுக்கு சமானம், அவர் வார்த்தையை கேளாத காதுகள் கோதுக்கு சமானம் அவர் அஸ்தத்தை பற்ருத கரங்கள் மரங்களுக்கு சமானம், இனி என் எண்ணம் மாருது, அவரையல்லாது வேறு யாரையும் நினவிலும் நினையேன், இனி பன்னிப்பன்னி மருத்துரைக்காதிர்கள்.

குறிப்பு:— மந்திரியின் மகன் பத்ரூேலை மணஞ்செய்துக்கொள்ள அலங்காரம் செய்துக்கொண்டு வருகிருன். சேடிகளிடம்தான் வந்த கருத்தை தெரிவிக்கிருன்.

சேடிகள் தரு - தர்க்கம்

என்னடி இதுவென்னகோலம் என்ற வர்ணமெட்டு.

மந்திரிமகனும் உம்மைநாடி—வெகு
சிந்தைமகிழ்ந்து வந்தானேடி ம

பத்ரூேல்

வந்தகாரணம் ஏதேன்ரறிவாய்
சுந்தரி நீசென்று தெரிவாய் வ

சேடி

அறிந்தோம் அவரை முன்னமேதான்
தெரிவித்த வார்த்தைப்போல்தானே அ

பத்ரூேல்

ஏளனம் செய்யாதே போடி இங்கு
கோளுரையாடுறாய் என்னடி ஏ

சேடிகள் வசனம்.

அம்மா உம்மை விவாகம் செய்துக்கொள்ள அலங்கார புருஷனுக வந்து இருக்கிருன், நல்ல அழகுள்ள புருஷன், மந்திரிமகன், நல்ல விவேக சாலி,

மந்திரிமகன் - பத்ரூல் - தர்க்கம்.

சுந்தர குணமுள்ள ஒருபுருடன் வந்திருப்பதாய்
அரசிக்கு அரிவிப்பாய் அடி சகியே சு

நான்கருப்பன் பாக்யசாலிவன் கருப்பு
குணங்கருப்பு காரழகன் மேனியன் சு

பத்ரூல்

மூதேவி சீ சீ காகம்போன்ற கருப்பா
போடா போடா• இல்லடா மூ

மந்திரிமகன்

மாதேஉனைப்போல் கருப்பில்லைபாராய் மணந்திட செய்

பத்ரூல்

போடாபோடா சீ அமைபுத்தியில்லாமட்டி சு

வசனம்.

நான் உனக்கேற்றநாயகன், என்னை விவாகம் செய்துக்கொண்டால் கேட்டதை எல்லாம் வாங்கி தருவேன், நான் அழகுள்ள புருஷன், என் அழகைப் பார்.

தர்க்கம் - மந்திரிமகன்.

அதிசரசி அதிவிஸ்வாசி என்ற வர்ணமெட்டு.

மடமயிலே குயிலே மாதே வருத்தமாய்பேசாதே
மதன்செய்வாதே மிகப்பொல்லாதே
வருத்திடாதே வெருத்திடாதே மட

உடலும்பொருளும் உயிரும்நானே
உனக்கென்று தந்தேனே மட

பத்ரூல்.

துர்வார்த்தைநாடாதே தூரப்போநீ-நானும்பரஸ்திரீ
தானுனலவேவா என்முன் நில்லாதே அப்பாலேவிலகிபோவாய் ம

வசனம்.

அடேமுட்டாள்! உன்னைநான் விவாகம்செய்வதற்கு என்ன நியாயம் வுண்டு, நீ என்தந்தையிடம் உன்தந்தை பணிசெய்யக்கூடியவன். அவனுடைய மகன்தானே நீ, நான் சொல்லும் வார்த்தையைகேட்டு அந்தப்படி நடக்கக்கூடியவன்தானே, போடா போ, பயித்தியக்காரா,

பத்ரேனுக்கும் - மந்திரி குமாரனுக்கும் - தர்க்கம்
ஜியாமோனே என்ற வர்ணமெட்டு.

ஒளிக்காமலவ்வுண்மையை உரைப்பாயே நீயும்

மந்திரி குமாரன்.

ஒளிந்துபோதிலும் விளையாடேன்
அளித்தவிடையதால் வந்தனன்யான்

பத்ரேல்.

களிப்படைவீரது பொய்யுரையாய்
தெளிவீரென்மொழி யுண்மையதாய்
யாதுக்காயிங்கடைந்து நீயேங்கினிற்கிருய்

மந்திரி குமாரன்.

யாதுக்கென்று எனைகேட்குருய்
சூதுசெய்யாமல் மோதிரம்பாரய்

பத்ரேல்.

யாதுக்குமோதிரம் கொண்டுவந்தாய்

மந்திரி குமாரன்.

மாதுனைமணர்ந்திடவே சிருய்

சேடி.

சீசீஉந்தன்எண்ணமும் வெளிபட்டதேகன்ருய் ஓ

மந்திரி குமாரன் - வசனம்.

பெண்ணே! என்னை விவாகம் செய்துக்கொள்ளுவதாக எற்கெனவே கணையாழி மாற்றிக்கொண்டிருக்கிருய், ஆகைபால் என்னை மருக்காதே.

தரு

பக்கலிலேவாடி - என்ற வர்ணமெட்டு

நானும்நீயும் ஜோடு நமக்கினியார் ஈடு
நம்மை யெதிர்ப்பவர் யார் யார் யார் நா
கைக்கு கம்மல் காதுக்கு கொலுசு
கண்ணே உனக்கு நான் போடுறேன்
கண்ணுட்டி வாவா பெண்டாட்டி வாவா
சீமாட்டி வா வா வா நா

வசனம்.

என் நாயகி! நான் உனக்கு வேண்டிய ஆபரணங்கள் போடுவேன். கைக்கு கம்மல், காதுக்கு கொலுசு, கழுத்துக்கு ஒட்டயாணம் போடுவேன்; நான் பயித்தியக்காரனல்ல! நல்ல புத்திசாலி.

மந்திரி - தரு.

ஹையூஸ் பேக்கு - என்ற வர்ணமெட்டு.

கமான்கமான் மைலேடி காசுக்குரெண்டு ஜோடி
சும்மாநீ முத்தம்தாடி சுகித்திடுவோம் வாடி
இதுசொகுசுள்ள மாடி இதுசொகுசாக வாடி
சுகித்திடலாம் இருவருமாய் ஜோராக கூடி கமா
மிட்டாயி பூர்திலட்டு மேலான சீனிலட்டு
தட்டாமல் வாங்கிபோட்டு தாரேனே கையைநீட்டு
ஜடுதியில் மாட்டு

வசனம்.

அடி கண்ணே! காமரசமே, கர்க்கண்டே, தேனே, அடி மானே, மயிலே; குயிலே என்னை கட்டி ஒரு முத்தம் கொடுத்தால் போதுமடி.

தரு.

கண்ணாலே நீபாராய் கண்ணா நீபார்
என்மூக்கை நீபார் என்னழகை நீபார்
என்நடையை நீபார் என்னுடையை நீபார்
என்காதை நீபார் என்கண்ணை நீபார் க

பத்ருநூல் - விருத்தம்.

அருமையெனும் நிலையரியாத அசக்தைநாயே
ஆண்டவனை பணிந்தரியாத அசட்டைநாயே
பொருமையென்பதரியாத போக்கிரிநாயே
புகழுடம்பைதாங்காத புழுக்கைநாயே
காவலனுக்குபிறந்த கசட்நாயே
காட்டில்வாழ்சிறுநாயே கடகெட்டநாயே
பெருமையிலா என்முன்பேசும்பேடிநாயே
பிணநாயே யினிவாயைமூடும்நாயே

வசனம்.

அடா மட்டி! எட்டிநட, என்னை கிட்டி வராதே? என்னை தொட்டால் உனக்கு விபத்துவரும், ஆனால் நான் சொல்வதைப்போல் கேட்டால் உன்னை விவாகம் செய்துக்கொள்ளுகிறேன்.

மந்திரி குமாரன் - வசனம்.

உன் இஷ்டப்போல் நடக்கிறேன், நீ எப்படி செய்யச்சொன்னாலும் அப்படி செய்கிறேன்.

மந்திரி குமாரன் - தரு.

ஹாயஹாருபான் - என்ற வர்ணமெட்டு.

பாவாடையும் தாவணியும் நான் வாங்கிதாரேண்டி
பங்காளத்து பட்டுவாங்கி சிங்காரிப்பேன் பெண்ணே
ஜிகுஜிகுவென்று ஜொலித்திடவே செய்திடுவேன் கண்ணே
ஆஎன் பெண்ணே ஆஎன் கண்ணே
ஆஎன் பெண்டாட்டி பா

வசனம்.

என் கண்ணே! என்னாசை தீர என்னை கட்டி யணைந்தால் நீ சொன்னபடி கேட்கிறேன்.

பத்ரூல் - வசனம்.

என்னை கலியாணம் செய்துக்கொள்வதாயிருந்தால் ஏழு அடி ஜாட்டியால் அடிபட்டால் உன்னை கலியாணம் செய்துக்கொள்ளுகிறேன். அடிக்கும்போது பேசக்கூடாது.

மங்-கு,வ-ம். பேச்சு வந்துவிட்டால் என்ன செய்கிறது.

பத்-வ-ம். மருபடியும் முதலிலிருந்து ஏழு அடி அடிபடவேண்டும்.

ம-கு, வ-ம். சரி; ஆனால் என்முதுகில்அடியும்

பத்-வ-ம். (ஜாட்டியால் அடிக்க) ஒன்று இரண்டு மூன்று-நான்கு.

ம-கு, வ-ம். இந்தப்பக்கம் வலிக்கிறது அந்தப்பக்கம் அடியும்

பத்ரூல் - வசனம்.

ஓகோ! பேசிவிட்டீர், இனிமுதலிலிருந்து அடிக்கவேண்டும், உனக்கு சம்மதமா.

ம - கு - வசனம்.

சரி; என்னசெய்கிறது, கலியாணம் செய்துக்கொள்வதாயிருந் இப்படிதான் ஒவ்வொருவரும் அடிபடுவது வழக்கமோ, என்னமோ! தால் சும்மாவருவாளா பெண்டாட்டி, நடக்கட்டும், நடக்கட்டும், உம். உம்.

பத்ரூல் - வசனம்.

அடிசகி! அந்தபயித்தியகாரனிடம் இருக்கிற கணையாழியை மாற்றிக்கொள்ளுங்கள்; என்னைப்போலவே நீ அலங்காரம்செய்துக்கொள், அவன் பயித்தியக்காரன், தெரிங்கொள்ளமாட்டான்.

குறிப்பு:— கணையாழியை வாங்கிக்கொண்டு சேடிகள் ஒன்று சேர்ந்து பரிகாசம் செய்கிறார்கள்.

தரு.

ஆஆஆ நீ மோசம் போனையே
ஓஓஓ நீ ஏங்கி நின்றாயே
கொண்டுவந்த எண்ணமுங் கைகூடவில்லையே
மண்டுபோல் மனங்கலங்கி மயங்கி நின்றாயே ஆ

மந்திரி குமாரன் - வசனம்.

அடி பெண்களே! என்னை மோசம்செய்து அவமானம் செய்த தால் நீங்கள் நந்தவனம் போய் ஜலக்கிரீடை செய்யுங்கால் உங்களை கண்டு நான் அவமானப்படுத்துகிறேன், அப்படி செய்யாவிட்டால் நான் மந்திரியின் மகனல்ல.

---

## 5-வது சீன் காலம் —மாலை.

### நந்தவனம்.

பத்ரோல் - தரு.

போவோம் போவோம் என்ற வர்ணமெட்டு.

வாரீர்போவோம் போவோம் வனிதயரே என்னுடன் வா
வயதுதளர்ந்தோனை கூடி வாயாடலாமோநீங்கள்
நயமுடனெனையணைய நாயகனை காணவே வா

பத்ரோல் - தரு.

தனிதனியாய் நதிக்கரையில் நலமுடனேசென்று
கனிவுடனே நீரில் விளையாடிடவே அடி
கன்னியரேவாரீ ரடிஇன்று தனி
அல்லிஆம்பல் அலரிமிக கொய்துநாமும் சூடி
அன்பன்ராமா னுஜன்பதம் பாடிடவே
ஆனந்தமாய் அனைவருங் கொண்டாடி த

குறிப்பு.— பத்ரோல் சேடிகள் யாவரும் நந்தவனம் வந்து ஜலக் கிரீடி செய்கிறார்கள், மந்திரிமகன் அங்குவந்து அவர்களை பார்த்து பரி காசம் செய்ய அலாவுதீனும் ஊமையும் அங்குவந்து மந்திரிகுமாரனை எதிர்த்து பூதத்தின் மூலமாய் அவனை அப்புரப்படுத்திவிட்டு நந்த வனத்தை வர்ணிக்கிறான்.

தரு.

காக்ஷி கண்காக்ஷியே என்ற வர்ணமெட்டு.

சோலைசிங்காரமே லாவண்யமானதுபாருமே சோ
சொல்லலங்கவும் விஸ்தாரமே சோ

சிருலாவு பூஞ் சோ
சுகமிக விகசித சோ
சோபிதமான கிராதிகள்மேவிய சோ
சுகந்தமிகுந்த வளங்கள்நிறைந்த சோ
சுந்தரமிருந்த அர விந்தகுளமுந்திகளும் சோ
சிந்தைமிகவும் நொந்துதனிமை வந்தவர்க்குகந்தயிந்த சோ
சுபமிக்குடைசர் ஜனர்மெச்சிடுநற் சோ

மாலைநேரமானந்த மாகதென்றல் ஜாடுது
மாங்குயிலோ மதுர. மாகயிசை பாடுது
கோலமிகுமயில் குலாவி நடமாடுது
குதித்துகுதித்து மான்கள் கூடியெங்கு மோடுதுபார்
கொஞ்சிடும் நற்பக்ஷிகளின் கூட்டம் அவைகள்
ரஞ்சிதமாய் வேடிக்கைகள் காட்டும்—இங்கே
வஞ்சமில் குரங்குகள் எதேஷ்டம்—தகி
அஞ்சாமல் செய்யுமீத ஆர்ப்பாட்டம்
வளர்க்கருமைவண்டு இளர்மதுவையுண்டு
உளமயக்கங்கொண்டு ஒளிர்குது பாரின்றுநன்று சோ
செங்கடம்பு மல்லிமுல்லை சண்பக மிருவாக்ஷி
செய்ய மனோஞ்சிதம் சிரக்குது என்னமாக்ஷி
மங்களமேவிய ரோஜா மன்மதபாணம் நீக்ஷி
மதுரகனிதரும் தருக்களென்ன கண்காக்ஷி பார்
மங்காதமலர் மணவிசேடம் இங்கே
தங்கியது அஷ்டலக்ஷ்மி வாசம்—இனி
சங்கையேன் நிரந்தா சந்தோஷம்—கர்ப்பகச்
சோலைக்கு மிதர்க் கென்ன வித்யாசம்
சாலும்ஹாஹா சபாஷ் காலமெல்லாம் தமாஷ்
மேலுமிது சீதோஷ்ணக் காலத்திற்க் கேற்றதுபேஷ் சோ

அலங்கிர்த பதுமைகளும் அமைப்புமிக அபாரம்
அன்றியும் பக்ஷிகளுக்கிவ் வரும்வனமே யாதாரம்
இலங்குநீர் பாச்சுகுழாய் இதுபுத்தியின் விஸ்தாரம்
இதுபோலுண்டோ இங்குற்றோர்க் கேதுமனவிசாரம்பார்
என்னஉன்னத பளிங்கிமேடை அதுவே
மன்னுதிரு செங்கழுனீர் ஓடை இதில்
துன்னும்அன்னம் செய்யும் ஜலக்கிரீடை களிப்பு

சன்னதமிவ்வனத்தாங்கீடே சிவ
சண்முகக் கவிராஜன் தாள்தொழும் நடராஜன்
தண்டதமிழ்பாடும் நேசன்
சாற்றிய செந்தமிழ் வாசம் வீசும் சோ

அலாவுதீன் - தரு,

ராகம்-பியாக், தாளம் ஆதி.

இந்தவனப்போலநான் எங்குநான்கண்டதில்லை
இதனைபேசவும்சேடனல் முடியாதே இ
சுந்தரவனத்தொளிர் சொருசுள்ளமலரதை
செப்பனனல் தரமாமோ
அந்தமிகும்ரோஜா அலரிசெங்தாமரை
அனேகமாயிவ்வனத்தில் அடைந்திருக்கின்ற இ
மான்களுலாவுது மயிலினமாடுது
மதியைமயக்கும் குயில்பாடுது
தேன்மொழியும்இந்த தேடரும்வனம்போல
தேசமதனில்காணேன் சிங்காவனந்தனை இ

அலாவுதீன் விருத்தம்.

மங்கைஇவள்தரிசனமே சாலோகபதவிஅதைமருக்கொணு த
மருவிலாசெங்கனிவாயூரலிலே தினையளவுகிடைத்தாலேஎன்ஜீவன்முக்தி
பங்கமிலாஇவள்பாததண்டனங்கள் வைகுண்டபதவியாகும்
இவள்அதரப்நீர்குடித்தால் பலகோடிதீர்த்தம்போலேதானே.

காதலிஎன்னை கலந்தாலே என்ற வர்ணமெட்டு

தரு

கனசரசக்காரி ஒய்யாரி சுகக்காரி க
காமஷ்ஸ்தாரி எனக்குபகாரி
கட்டியணைந்தமுத்தம் கனிவுடன் தாராளோ க
வட்டஸ்தனமிரண்டும் மார்பிலழுந்தவே
மருவினலன்றோ மாமோகந்திரும்
வாவாஎன்னஞ்சுகமே மடமானே தேனே க

பத்ரேல் - வசனம்,

சகிகாள்! இந்த மன்னவனைதான் நான் சொற்பனத்தில் கண்டேன், என்ன வடிவழகன், என்ன சிங்காரன், என்ன கெம்பீரமான பார்வை என்ன வீரம் என்ன தீரன்.

சோலை சிங்கார என்ற வர்ணமெட்டு.

தரு

என்ன லாவண்யமே சிங்கார மன்னனிவன் எ
உன்னிதமுக விலாசம் தன்னில்வளர் மந்தகாசம் எ

சட்ட நிரூபணசபை தனக்கிவரொரு மெம்பர்
சக்ரவர்த்தி தங்களின் கணக்கிலிவர் முதல்மெம்பர்
சாமிஇவன்மேல் மணக்கும் ஜாதிபுனுகத்தர் அம்பர்
இஷ்டனிவனிந்திய நவாப்பு நல்ல
இங்கிதமாய் சொல்லுவான் ஜவாப்பு பொன்
கட்டிய வயிரமணி கியாப்பு பவர்
காந்தலயிட்டேடந்திய மத்தாப்பு
திட்டமுள்ள திவான் திடமையுள்ள ஜவான்
துஷ்டரை கலவான் சுதேசத்தில் பலவான் எ

யீசனுக்கும் இவனுக்கும் என்னதான் சம்மந்தமோ
இங்கிலீஷ் துரைதனத்தில் எவ்வித ஒப்பந்தமோ
இவனை வர்ணிப்பதெந்த பாஷையின் பிரபந்தமோ
மாசிலா விஸ்வாசமுள்ள மிஸ்டர் இவர்க்கு
மனவி நானென்பது ரிஜிஸ்டர் சட்டம்
வாசித்துத்தேரிய பாரிஸ்டர் நல்ல
மந்திரி தத்துவத்தில் சிரேஷ்டர்
பேசும் இவன்வாக்கு பெருமையுள்ள மோர்க்கு
தேசத்திலுள்ளோர்க்கு ஜெயம்தரும் கண்ணுக்கு இவன் எ

பத்ருேல் வசனம்.

இந்த மன்னவனுக்கு இணை எவருண்டு, இவரைக் கண்ட நான் அணையாமல் இருந்தால் என்ன சுகம், சீக்கிரம் செல்லுவோம்.

சகி - வசனம்.

அம்மா; அது சரியல்ல! தந்தையின் மூல்யமாய்தான் நீர் இவனை மணக்கவேண்டும், அவருக்கு பிரியமிருந்தால் உமது தந்தையைக்கண்டு கேழ்க்கட்டுமே.

எங்குகண்டு தேடுவேனம்மா என்ற வர்ணமெட்டு.

அலாவுதீன் - தரு

அதிரூபலாவண்யமின்னால் ரதிமாதேளன்ன அதி

மதியெனதிருமுகம் வாய்க்திடும் காந்தி
வனிதயர் தங்களின் மனப்பெலாமேக்தி
வதிசிவனுதிய வியந்திடபொருந்தி
மேவியஉயிர்தனை தாவியருந்திட அ
முல்லையரும்பென மூசந்திடும்பல்லாள்
மோகவாளிதொடுத் திடும்முதல்வில்லாள்
கல்லுமுருகஉரைத் திடும்சொல்வாள்
கனமாரன்வதனையும் கவர்ந்திடவல்லாள் அ
அதிசுதிலயத்துடன் பாடும்சிங்காரி
தனியின்மயிலென நடனஒய்யாரி
கதிர்போல்மணிகள் அணியலங்காரி
கனத்திடும்திரேகத்தில் மணக்குங்கஸ்தூரி அ

அலாவுதீன் - தரு.

குறிப்பு:—ராஜகன்னிகையை அலாவுதீன் கண்டதுமுதல் அதுவே ஏக்கமாய் அன்னஆகாரமில்லாமல் காமத்திலாழ்ந்தி, கண்ணுறக்கமின்றிகளைத் திருக்க.

செரிந்தகருங்குழல் என்ற வர்ணமெட்டு.

பீபீ - தரு - தர்க்கம்.

மகனேஎன்னகவலையடா அதைவாய்திறந் தென்னுடன்சொல்வாயடா
ஆனுறக்கம்தான்வெறுத்து நீ இருப்பதேண்டா முகங்கருத்து ம

அலாவுதீன்.

கண்டேன்கண்டேன் ராஜபுத்ரீயை கண்டேனம்மா க

பீபீ

அறிவில்லாத பேதையைபோல் அரைந்தாய்மனம் கூசிடாமல்
மரியாதையோ ராஜகன்னியின் மாமோகத்தில் வீழ்வதுவீண் க

அலாவுதீன்.

வீணென்று சொல்லுகிறாய் யென்னுயிர் வீணில்போகுமே
நீ இவ்வாறு செய்யாவிடில் னிந்தையாகுமே க

சீனராஜன் கொலுமண்டபம்

குறிப்பு:— மந்திரிகள் அனேகர் புடைசூழ ராஜன் சிம்மாசனத்தில் அமர தேசவிசாரணை நடந்த பின்னர் குழந்தையின் க்ஷேமம் விசாரித்தல், பூதத்தின் உதவியால் அனேக ரத்தினங்களை காணிக்கையாகக்கொண்டு ராஜனைக்காண பீபீ வருகிறாள்.

ராஜன் - தரு - தர்க்கம்.

காட்டடா நீ உந்தன் பலத்தை என்ற வர்ணமெட்டு.

ஆரம்மா நீ இங்கேவந்ததை சொல் ஆ
பேரென்ன ஊரென்ன பிசகாமல் சொல்வாயே
திரமாயுன்கருத்தை முடிக்கச்செய்வேன் ஆ
உலகத்திலில்லா தரத்தினம் உண்மையாககொர்ணாந்தாய்தினம்
மனக்கவலை ஏதோ வழுத்துவாயாமானல்
கலக்கமில்லாமலே களிப்பாக முடிக்குறேன் ஆ

பீபீ - விருத்தம்.

மாமுதவா மடனுதவா மற்றுமுள்ள காயுதவா
தாமுதவா நிழலுதவா தங்கியிற்க தானுதவா
திரமுதவா குணமுதவும் திண்மையதாம் மாம்போல்
கரவுடையாள் நெஞ்சளேனை கைதூக்கி காப்பீரே.

வசனம்.

பிரபு! நானே ஏழை குடும்பத்தில் பிறந்தவள், நான் தம்மிடம் வந்து பேசுவதற்கு யோக்கியதையற்றவள், ஆயினும் தாம் என்னுடைய கருத்தை யுரைக்கவேணுமென்று கேட்டதால் தெரிவிக்கிறேன் ஆனல் மரியாதை இதுதான் என்று எனக்கு தெரியாது; என் வாச்சாவில் குற்றமான வார்த்தை தவறி ஏதேனும் வந்தால் மன்னிக்கிறேன் என்று வாக்குக்கொடுத்தால் உரைக்க தடையில்லை.

அரசன் - வசனம்.

நீ குற்றமான வார்த்தை தெரிவித்தாலும் மன்னிக்கிறேன்; தயங்காமல் உன் கருத்தை வெளியிடுவாய்.

பீபீ - தரு. தர்க்கம்.

பொன்னூர் மேனியனே என்ற வர்ணமெட்டு.

சொல்வேன் பாதுஷா என் துயரை தீர்த்தாலும்
துஷ்டபிள்ளையால் சோகமடைந்தேனே சொ

அரசன்.

சோகமேனம்மா அதை சொன்னல் தெரிவேனே
துன்பம் விட்டென்னேடதை சொல்ல ஒளியாதே சொ

பீபீ

உனது புத்ரியை மகன் உற்று கண்டானும்
ஊணுரக்கமின்றி அவன்வுடல் மெலிந்தானே சொ

அரசன்.

ஆனாலவர்க்கென்ன செய்யவேணு மென்னாலே
கோணாதுரை செய்வாய் அவன்குறையை தீர்ப்பேனே சொ
ப்பி

கலியாணம் செய்ய அவன்கருத்தில் கொண்டானே
மலிவாய் சொல்லியென் வார்த்தை தள்ளினான் சொ

அரசன்.

அவனை என்னிடம் நீ அழைத்து வருவாயேல்
கவலைதீர்த்தபின் கன்னியைத்தருவேன் சோ

அரசன் - வசனம்.

அம்மா! உன் இஷ்டப்படியே என்மகளை உனது அருமை மகனு க்கு விவாகம்செய்து தருகிறேன், ஆனால் உனதுகுமாரனை இங்குவரச் செய்வாயானால் மகனைக்கண்டு அவனிடம் நான் சில கேள்விகள்கேட்ட பிறகு உன் இஷ்டப்படி விவாகம் செய்யலாம்.

குறிப்பு:—அலாவுதீன் ராஜவுடை தரித்துக்கொண்டு அரசன்சமு கம் பிராப்தமாகிறான்,

அலாவுதீன் தரு - தர்க்கம்.

ஆகாசரசமாரனே என்ற வர்ணமெட்டு.

சலாம்சலாம் பலஉயிர்க் கொருதுணைபாக்ஷா
தயவாகஎந்தனை அழைத்த னென்னுயிர்தீக்ஷா

அரசன் - தரு

மங்களம் மங்களம் அலாவுதீனெனும் தீரா

அரசன் - வசனம்.

அலாவுதீனெனும் தீரா! என்மகளை உனக்கு விவாகம்செய்ய எண்ணி இங்கு வரவழைத்தேன் உனக்கு பிரியந்தானே?

அலாவுதீன் - வசனம்.

ஹேபிரபு! உம்முடைய வாக்குக்கு மறுவாக்கு முண்டா? தமது பிரியம்போல் செய்ய அடியேன் பாக்கியம் பெற்றவனாவேன்.

குறிப்பு:—கலியாண மண்டபம் புதியதாக இயற்றி அனைவரும் மகிழ்ந்து ஆனந்தமுற அலாவுதீனுக்கும் பத்ரோலுக்கும் விவாகம் நடக் கிறது.

---

## 6-வது சீன் காலம்—பகல்

### புதுமையான மாளிகை.

வசனம்.

என்நாயகி! இனிநாம் ரதியும் மன்மதனைப்போல் களித்து மகிழலாம், ஆனால் நேற்றியதினம் உன்தந்தையின் சபையின் குடிகள் மிருகங்களின் கொடுமையை தெரிவிக்க தந்தையார் என்னைவேட்டைக்கு போகும்படி உத்திரவிட்டிருக்கிறார். ஆகையால்அதிக நீஜாக்கிறதை. நி இவ்விடத்திலேயேயிரு, நான் அதிசீக்கிரம் வேட்டையாடி மிருகங்களைத்து வருகிறேன்.

மந்திரவாதியின் - தரு.

காவலிங்குண்டு என்ற வர்ணமெட்டு.

பழயவிளக்கை கொடுத்தால்
புதியவிளக்கை கொடுப்பேன்
பாவையரே பூவையரே
பார்த்துஇதை வாங்கலையா
அம்மம்மா அய்யய்யா பார்த்து இதைவாங்கலையா பழை
முன்பின் யோசனையில்லாமல்
முரிந்தவிளக்கையும் தந்தால்
என்னென்று மகிழயெந்தன்
இணையில்லா தீபம் தாரேன்
அம்மம்மா அய்யாவே இணையில்லா தீபம்தாரேன் பழை

வசனம்.

பழய கைவிளக்கை கொடுத்தால் என்னிடம் இருக்கும் புதிய விளக்கை பெற்றுக்கொண்டு போகலாம். யாதொருதடையுமில்லை, நல்ல சமயம், இழந்துவிடாதீர்கள்.

தோழி - வசனம்.

அம்மா! யாரோ வியாபாரி பழைய விளக்கை கொடுத்தால் புதிய விளக்கை தருவதாக தெரிவிக்கிறான்.

பத்ரோல் - வசனம்.

அடி! சேடி! நம்மிடம் மாடி அரையின் மூலையில் ஒரு பழைய விளக்கு ஒன்று கொடுத்துவிட்டு இரண்டு புதியவிளக்கை பெற்றுக்கொண்டு வாருங்கள், சீக்கிரம். போய்விடப்போகிறான். செல்லுங்கள்! செல்லுங்கள்!

(தீபத்தை பெற்றுக்கொண்டு சேடிகள் போகிறார்கள்.)

மந்திரவாதி - வசனம்.

ஆஹா! சபாஷ்! சபாஷ்! இந்த தீபத்திற்காக அனேக நாளாய் எதிர்பார்த்தும் கிட்டாமல் இப்போதுதான் கிடைத்தது, இனி இந்த பெண்ணையும் நாமடையலாம். அலாவுதீனை அடியுடன் தொலைத்துவிடுகிறேன்.

குறிப்பு:—மந்திரவதி தீபத்தை பூமியில் தேய்க்க பூதம் வெளிப்பட பூதத்தின் உதவியால் மாளிகையோடு ஆபிரிக்காதேசம் கொண்டுசெல்லுகிறான்.

அரசன் மாளிகைக்கு எதிரில் இருந்த மாளிகை அடியுடன் காணாததால் அலாவுதீனைக்கண்டு ஒருவாரதவணைக்குள் மகளையும் மாடியையும் கொண்டுவந்து சேர்க்காவிட்டால் சிரச்சேதம் செய்வதாய் உத்திரவிட, உடனே அலாவுதீன் அணிந்திருந்த கணையாழியை தேய்க்க பூதத்தின் உதவியால் அலாவுதீனும் ஊமையும் இருவரும் ஆபிரிக்கா தேசம்போய் சேருகிறார்கள்.

---

## 7-வது சீன் காலம்—இரவு

ஆபிரிக்கா தேசம்.

மந்திரவாதி - தரு.

இராகம்-கல்யாணி, தாளம்-ஆதி.

பல்லவி.

தேசமதனில்வெகு பூஜித்தார்த்தகன
நேசியாரோ மாசிலாதமோகன தேச

அநுபல்லவி.

வாசமாமலர் ஆடும்சுந்தரி
வாணவாதிமுதல் மேவுஞ்சுந்தரி
பேதில்லாதவள் மேன்மைமிகுந்தரி
பேருலாவுமதியாமோ துரந்தரி தே

சரணம்.

சீதளமுகவிலாசி அதிசரசி சீ
திவ்யநடைபரவும் மெல்லியஇடையரவும்
கௌவுமெழில்பெரவும் சிருப்பேருங்கிருரும்சொல்லலரிய
சித்திரவுத்திதமிகு பெற்றதெனசவுரிய
காதில்ரத்தினஓலை களிப்புடனணி சுகவனிதயர்மேலே
ஓதில் பணியுங்காலே உயர்குண பருவமதனபலனுக்லே ஓ

கற்ற சிறுநடை பெற்ற மடமயி
லொன்ற கனதன முற்றமடவன
கல்லாபரண சுக சல்லாபமுளதென
சொல்லாத வரும்புகழ் வெல்லாமுடைய திகழ்
கச்சிதமாகிய உச்சித பெண்மணி
கொச்சைமொழியும்வள கச்சணிவிண்மணி
கண்டுகொண்டு சிறு தொண்டுவிண்டு புரி
வண்டிரண்டுவிழி கொண்டேஉண்டு தெளிர்காக்ஷி
பலருங் கண்டொரு மாக்ஷி
கொள்ளவே நின்றிடு தாக்ஷி
கடித்தலத்திடை நீக்ஷி
சொல்லவே இந்த காக்ஷி
கன்னிகையை கண்டேனது யெண்ணமும் தடுமாறுது
வண்ணமே யுருவாய்வந்த கன்னிய சொருபமிந்த
காரிகையை கண்டுமையல் மீறுதென்ன சொல்வேன்குரு
நாராயணசாமிபதம் பாராயணம் செய்வோமெழில் தே

மந்திரவாதி - தரு

ராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-சாப்பு.

கோடியசூர்ய ப்ரகாச சுதேகி
பலே ஜோக்கி மதன வைபோகி
சிர்மதிவதனி திவ்ய தரிசனி
சுகிர்த லீலாவசனி மாயெவ்வனி கோடி
கமிழ்பது மினியோ காணுமின் மினியோ
விமலியோ மோகினியோ
நாகக்கன்னியோ விமலியோ மோகியோ கோடி

பத்மேருல் - தரு

தகாதுதகாதுக்காடது என்ற வர்ணமெட்டு,

மதிபோதாது போதாது பண்ணுநீ செல்லுவாயே
விதியின் வசமோயிது மதி
சதிகாரபாவியேநீ எனை சேரலாகாதே பலதபஙதத்துநீ
குதித்து வாடுறாய் பேதையைப்போலே மதி
சண்டாள மோசக்காரனே துன்மார்க்கப் பேயனே
கடுஞ்சொல் வஞ்சகனே கபடநெஞ்சனே விடென்னைப்பஞ்சனே மதி
சொன்னேனுனக்கே நீதி சன்மார்க்கமே கியாதி
சற்றுநோக்கடா நீ வற்றுபாரடா மூத்துசொல் கேளடா மதி

விருத்தம்.

பாபமெலா மோருருவாய் திரண்டுரண்டு
நீண்டுவந்து நிற்பவனே சேளாய்
கோபமதால் பதிவிரதை ஏதேனும்
யொன்றதனைக் குறித்தாலந்தச் சாபமது
உன்னையும் பெண்டுபிள்ளையாவரையும் யொழித்திடாதே
தீபத்தைக் கனியென்றெண்ணும்
விட்டிலைப்போல் தீய்ந்திடாதே-

பத்ரூல் - தரு

உன்னேடெதிர்க்கா என்ற வர்ணமெட்டு.

சற்றேமனது பொருத்திடுவீர் இஷ்டம்போல நடக்கிறேன் ச

உற்றதை உறைக் கின்றேன் கேளும்
உகந்திருக்கலா மென்னுளும் சற்

ஆறுமாதம் நோன்பு தீர்ந்தால்
ஆவல் தீர்ப்பே நான்மகிழ்ந்து சற்

வசனம்.

ஐயா! உம்மீது எனக்கு அதிக ஆசையே ஆயினும்; உம்மைப் போன்ற அழகுள்ள புருடன் கிடைப்பானகில் என்னிஷ்ட தெய்வத்திற்கு ஆறுமாதம் விரதம் இருப்பதாக எனது கோரிக்கை, அப்படி பொருத்தால் உமது காரியத்தை முடித்துவிடுகிறேன்.

குறிப்பு:— அலாவுதீனும் ஊமையும் அவன் மனைவியாகிய பத்ரூலைக்கண்டு விசனித்தல்.

அலாவுதீன் - வசனம்.

பெண்ணே! நீ எப்படி இங்குவந்தாய், நிகழ்ந்தவை யாது மறைக்காமல் உரை செய்வாய்

பத்ரூல் - வசனம்.

நாதா! நீர் வேட்டைக்குச் சென்ற பிறகு இங்குள்ள ஒருவன் பழைய விளக்கை கொடுத்தால் புது விளக்கு கொடுப்பதாக வீதியில் கூவிக்கொண்டு வந்தான், இந்த பாவி சேடியானவள் இந்த பழைய தீபம் இருக்கிறது, அதை கொடுத்துவிட்டு புதிய விளக்கை வாங்கலாமென தெரிவிக்க, நான் மகிழ்ந்து புதிய விளக்கை பெற்றுக்கொண்டோம். அதன்

பிறகு பார்க்க இந்த நகரம் வேறு விதமாய் காண திகைத்து நிற்க, மந்திரவாதியானவன் தான் கொண்டுவந்தானும் என்னையும் சேர அழைத்தான் ஆறுமாதம் விரதமென்று சொல்லி நாளைக் கழிக்கிறேன்.

அலாவுதீன் - வசனம்.

நாயகி! நல்லகாரியம் செய்தாய், ஆனால் அவன் இந்து உன்னிடம் குரங்கைப்போல் பல்லிளிப்பான், அப்போது நீ அவனுக்கு இசைந்தவளைப்போல் அபிநயத்து நான்தரும்படியான இந்தபொடியை ஷர்பத்தில் கலந்து. கொடுத்துவிடு, அவனுக்கு மயக்கம் மேலிட்டுதவிக்கும் சமயம் நாங்கள் தீவிரம்புரப்பட்டு அவனைபிடித்து கொன்றுவிடுகிறோம். இதுதான் தந்திரம். இந்தா அந்தப்பொடி.

மந்திரவாதி - தரு.

ஏதுஏது இந்தரூது என்ற வர்ணமெட்டு.

மையல்மாரன் யெய்யும்வாளி
ஐயோமைய லாகுதே
தையலேகால்கைகள் சோருதே
செய்யதாள் பணிவேனே மை
கண்ணேவாராய் காதல்தீரய்
பெண்ணேமோடி செய்வதால்
கன்னல்வில்லோன் ஏவும்அம்பினால்
இன்னல்பட லாமோடி மை
சங்கையேஏன் அங்கையாலே
மங்கையைதொட் டாடவோ
மங்கிடாதுன் துங்கவாயிதழ்
இங்கெனக் கீகுவாயடி மை

பத்ரோல் தரு - இந்துஸ்தான்.

ஜண்டல்மேன்
ஹாவோஜி ஹாவ் மிஸ்டர் ஹா
ஹா ஹாஜி
தேவோஷகின்
தோபிவுதாருக்கே வுஸ்கிதாருஹை
லிம்னட்டுசோடா
பீல்யோபீல்யோ ஜண்ட்ல்மென் ஹாஹாஜிமிஸ்டர் ஹா
டோப்பிபிசாஹ
மிஸ்டர்காலாந்தி
ஜண்ட்ல்மென்
பீல்யோபிலியோ மிஷ்டர் ஹா
ஹாஹாஜி

மந்திரவாதி தர்க்கம்.
எததாய் மயக்கா என்ற மெட்டு.

இனியெல்லோருமென்ருகக் கூடியிருக்கலாம்
வுஸ்கிபிராந்தி சாம்பெயின் குடிக்கலாம் இனி

பத்ரூல்.

அதுவுடம்புக்கு நல்லதுதான அதுவுடம்புக்கு நல்லதுதான

மந்திரவாதி-தொகையரு.

குடியேஆனந்தம் குடியேவுச்சாகம் குடியேபிரமானந்தம்.

சேடிகள்

ஆமாம்அது நிஜந்தான் அதுநிஜந்தான்

மந்திரவாதி.

சோடாலிம்னட்டு தட்டிசோருய் டம்ளரில் கொட்டி
வேஷாக்காக நாமும்குடித்து ஆடலாம் இனி

வசனம்.

அடி என்கண்ணே காமரசமே சர்க்கண்டே தேனே மதனபிஷேகமே வுன்னுசையால் நான்மதிமயங்கி மாருத ஆசையைக்கொண்டேன் இனி நீயேஎனக்கு மனைவி உனக்குநானே கணவன் இனிவுன்னைவிட்டு விடுவேனென் நீ நினைவிலும் எண்ணுதே வாடி என்கண்ணே.

சாராயத்தை குடித்துவிட்டு மயக்கமேலிட்டு கீழேவிழ, அலாவுதீன் மாடியில்இருந்து குதித்து அவனைவெட்டி இரண்டுதுண்டாக்கி விட்டு, தீபத்தையும் கைபற்றிக்கொண்டு அனைவரையும் அழைத்துக்கொண்டு சிைறு தேசம் புரப்படுகிருர்கள். பூதத்தை வரவழைத்து பூதத்தின் உதவியால் எல்லோரும் தமதுதேசம் வந்து சேருகிருர்கள்.

(இங்குடர்னிங்சீன் - கவனிக்கதக்கது.)

சேடிகள் - தரு.

மாராஎங்களை காத்திடும் மகானுபாவா
பாவா பாவா } பணிந்தோம் மா

சேடிகளெல்லோருங்கூடி வேடிக்கையாய்பதம்பாடி
ஆடிடுவோம் சுஞ்சுனனன வென்ருடிடுவோம்
பாவா பாவா பணிந்தோம் மா

எத்தேசமு[illegible]மும் இணையில்லா இச்சரிதை
முத்துகிருஷ்ணன்பாடிய கவியைப்போற்றுவோம்
பூபா பூபா போற்றுவோம் மா

அலாவுதீன் என்னும், அற்புததீபச் சரித்திரம்,

முற்றிற்று.

...ாருநதிய நண நாவல் (வெளிவந்த ... வனம்புகழ் புதியநாவல்
உலக அநுபவங்களை விளக்கிக்காட்டும் சிறந்தநாவல் !!!
...யின் கொடுமை! (முந்துங்கள்) மருமக்களின் துயரம்!!
...களின் கொண்டாட்டம்! மாமிமார்களின் திண்டாட்டம்!!
குடும்ப விஷயத்தில் ஏற்படும் சச்சரவுகளை நிரூபிக்கக்கூடியது.

---



# மங்களபூஷணம்

அண்டு

மாமியைவென்ற

# மதிபூஷணம்

என்னும்

ஓர் துப்பறியும் செந்தமிழ் நாவல்

350-பக்கமுள்ளது விலை ரூ-1¼

தபால் செலவு வேறு.

எமது அன்புள்ள சகோதர சகோதரிகாள்! தற்காலத்தில் மாமிமார்கள் மருமக்கள்மாரின் துன்பப்படுத்தி யாதொரு சுதந்திரம் கொடாமல் இருப்பதினாலும் அதனால் நேரிடும் இடையூறுகளை கவனிக்காது போராடுகிறார்கள், அப்படி செய்யும் பத்தியில்லாதவரின் செய்கைகளையும், மருமக்கள் மாரின் பத்தி சாதுர்யத்தினால் இல்லறத்தில் சுகதுக்கம் அனுபவித்து நற்பெயர் பூண்டு கொடுமையுள்ள மாமிகளை வென்று சுகப்படுவது முதலானதுகள் இப்புத்தகத்தில் யாவருக்கும் தெட்டென விளங்குமாறு மூதாட்டியாரில் வாக்கியங்களும், பழமொழிகளும், வித்வசிகாமணிகளால் புகட்டிய அரும்பெறும் விஷயங்களும், எழுதி காட்டியிருக்கிறது, இதிலுள்ள பலவிஷயங்களை வாசித்து நன்குணரவே இப்புத்தகத்தை வெளியிட்டனம், இப்புத்தகம் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியதே. நீங்கள் எத்தனையோ நாவல்களும் கதைகளும் வாசித்திருப்பீர்கள், அதைப்போல் நாவல்தானே என மதிக்காதீர்கள். நீங்கள் இதிலுள்ள விஷயங்களை கட்டாயம் வாசித்துப்பார்க்க கோருகின்றோம்,

இப்புத்தகத்திலுள்ள கதையை கொஞ்சம் சுருக்கமாக காட்டுவோம்.

தற்பெண்ணமுடைய கொடுங்குலி என்பவள் தனது முதல் மருமகளாகிய சாந்தமிகுந்த மங்களபூஷணத்தை படாதபாடு படுத்தவும் அம்மாது ஆற்றொணாதுயரங்கொண்டு பக்தி வழியில் செல்லவும், அதின்பிறகு மதியிற் சிறந்த மதிபூஷணத்தை தனதுகுமாரனாகிய தியான சுந்தரத்திற்கு இரண்டாந்தாரமாக கட்டிக்கொண்டாள், அந்த மதிபூஷணத்தையும் தனது நேசிகளாகிய பன்னகத்தினோடும், தனபாக்கியத்தினோடும், முதல்மருமகளைப்போல் இம்சிக்கிறாள், இதையெல்லாம் கண்ட மதிபூஷணம் மேற்கூறிய மூவரையும் பலவாறு துன்பப்படுத்தி விடுகிறாள், கடைசியாய் மூவரும் ஓர் கொலை செய்துவிட்டு மதிபூஷணத்தி... பேரில் பழியைப் போட்டு அதற்கு சில திருஷ்டாந்தரங்களை காட்டி விடுகிறார்கள். அதன்ப... வக்கீல் வாசுதேவராவ், மங்களபூஷணத்தின் பிதாவாகிய குணசாகர முதலியாரும் இக்கேசுக்கு முன்னிற்கவும் சுதந்திரத்தினமாகிய மதிபூஷணத்தினால் மகாதந்திரமாக துப்பறிந்து கோர்ட்டார் முன்னிலையில் சரியான சாட்சி ருசுவைகாட்டி விடுகிறாள். அதற்குப்பின் மங்களபூஷணத்தோடும், மதிபூஷணத்தோடும் தியானசுந்தரம் சந்தோஷமாக வாழ்கிறார்கள். இது சூட்சமமாக காட்டினோம்.

---

எமதுவிலாசம்:—டி. செங்கல்வராய நாயுடு,
முராஹரி பிரஸ் டெ 20 நம்மாள்வார் தெரு. முதல்சந்து, சென்னை.

ஸ்ரீமான் கலியா... முதலியா...

# சீகாளத்தி புராண வசனம்

இப்புராணத்தை படித்து புத்தகத்தை கையில் வைத்துக்கொண்டு க்ஷேத்திரத்திற்குப்போய் அங்குள்ள தீர்த்த மகாத்மியங்களும், அங்கு பக்தா... பரமசிவன் மோக்ஷமளித்த விவரம் யாவும் தத்ரூபமாய் காணலாம் இது எல்லே...ரின் விருப்பத்தின்படி மேற்படி முதலியாரால் எழுதப்பட்டு ஆயிரம் கணக்கா... புத்தகங்கள் சிலவாகி வருகிறது. இதை ஒருதரம் வாசித்தால் இதனுல் உண்டா...கும் பலன் உங்களுக்கே விளங்கும்.

சீகாளத்தி புராணவசனம், ஐநீக திருவுருப்படங்களுடன் விலை அணா-6.

---

மதுரை ஒரிஜனல் பாய்ஸ் கம்பெனியிலும், ஆலந்தூர் கம்பெனியிலும், ம-ா-ா-ஸ்ரீ, கே. சீனிவாசப்பிள்ளை யவர்கள் கம்பெனியிலும், தற்சமயம் நடித்து ஜனங்களும்பார்த்து நன்கு மதிக்கப்பெற்றுவரும்,

# புல்புல் அயான் என்னும்

## பாதுஷா - ஜமீலா சரித்திரம்.

ரெயில்வண்டி பாளத்தில்விழும் சரித்திரம் (டிராமா) விலை அணா—4

---

T. நாராயணசாமிபிள்ளை கம்பெனியிலும் சி. கன்னைய்யா கம்பெனியிலும் R. சீனிவாசபிள்ளை கம்பெனியிலும், இன்னும் பல கம்பெனிகளில் நடத்தி நற்கியாதியும், ஜனக்கூட்டமும், புகழும் பெற்ற

# சந்திரஹாஸன் சரித்திரம்

## இது ஓர் புத்திபுகட்டும், சிங்கார நாடகம்.

இதில் சந்திரஹாசன் திக்கற்றவனுய் பிச்சை எடுக்கும் துக்கமான பாட்டுகளும், துஷ்டபுத்தியினுல் அநேக துன்புற்று கொலையாளிகளால் விரல்வெட்டுண்டதும், குந்தளதேசம் சேர்ந்து வளர, துஷ்டபுத்தி பொருமைக்கொண்டு விஷத்தைக் கொடுக்கச்சொல்லி எழுதியனுப்ப தற்செயலாய் விஷை என்பவள் அதை மாற்றி கலியாணம் நடப்பதும், பிறகு கேரளராஜன் குமார்த்தியை மணர்வதும் ராஜ்யம் பட்டம் கட்டிக்கொள்வதும் ஆங்காங்கு தர்க்கப்பாட்டுகள் வீரம் சிங்காரம் முதலியன பொருத்தியிருக்கும் நாடகம் கற்றுக்கொள்பவருக்கு மிகவும் அனுகூலமானது, ஷை கம்பெனிகளில் இந்நாடகத்தை நடத்த பார்த்தவர்களுக்கு இந்நாடகத்தின் பெருமை விளங்கும். புத்தகம் 1.க்கு விலை அணா 0 4 0

---

| | | |
|---|---|---|
| சித்ரசேனுபாக்கியானமெனும் காலவரிஷி சரித்திரம் (இ. நா. பிள்ளை கம்பனி) | 0 | 4 |
| அலாவுதீன் அல்லது அற்புத தீபச் சரித்திரம் டிராமா | 0 | 3 |
| சகல கம்பெனிகளில் நடித்துவரும். | | |
| காளிதாஸ்சரித்திரம் டிராமா | 0 | 4 |
| சதியனுசூயா டிராமா | 0 | 4 |
| ஷை இரண்டாவது | 0 | 4 |
| கோவிலன் கர்ணகி | 0 | 4 |
| ஷை இரண்டாவது | 0 | 4 |
| பாரிஸ் லங்காதகனம் | 0 | 4 |
| ஞான சவுந்திரி | 0 | 4 |
| நல்லதங்காள் சரித்திரம் | 0 | 4 |
| ஷை இரண்டாம்பாகம் | 0 | 4 |
| வள்ளி சரித்திரம் | 0 | 4 |
| அலிபாபா என்னும் 40-திருடர்களின் அற்புதசரித்திரம் டிராமா | 0 | 4 |
| சற்குண சாவித்திரி | 0 | 4 |
| கஜேந்திர மோக்ஷம் டிராமா | 0 | 4 |
| லவகுச டிராமா | 0 | 4 |
| ஷை இரண்டாம்பாகம் | 0 | 4 |
| பாரீஸ் மதிவல்லப மோகனன் | 0 | 4 |
| கிருஷ்ணலீலை டிராமா | 0 | 5 |

---

டி. செங்கல்வராய நாயுடு,

முராஹரி அச்சுக்கூடம், நெம்பர் 20, நம்மாள்வார் தெருவு, முதல் சந்து, சென்னை